18.03.2026.

<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )</u>

<u>விழுப்புரம்</u>

<u>அமர்வு வழக்கு எண். 191/2025</u>

அ.சா.5

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வெற்றிவேல் | | |
| த/பெ | ரமேஷ் | | |
| கிராமம் | ஜானகிபுரம் | தொழில் | Development Manager, |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 24/2026 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 18.03.2026. |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது சென்னையில் அரசு பள்ளிக்கூடத்தில் ஸ்மார்ட் கிளாஸில் டெவலப்மெண்ட் மேனேஜராக பணி செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் எதிரி வீரபத்திரனின் ஒப்புதல் வாக்கு மூலத்தில் உள்ள 1 ம் கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்தை சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் விழுப்புரம் தாலுக்கா காவல் நிலையத்திற்கு சொந்த வேலை காரணமாக சென்றபோது எழுதாத ஒரு வெள்ளை தாளில் அங்கு நான் வந்ததற்கு ஆதாரமாக கையொப்பம் பெற்றார்கள். வேறு ஒன்றும் எனக்கு தெரியாது. என் முன்னிலையில் யாரையும் விசாரணை செய்யவில்லை. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள ஒன்றாம் கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை:

கடந்த 02/06/2023-ம் தேதி மதியம் சுமார் ஒரு மணியளவில், நானும், என் நண்பர் சித்தாத்தூர் திருக்கையை சேர்ந்த தட்சிணாமூர்த்தி மகன் வல்லரசு என்பவரும், ஜானகிபுரம் ஏரிக்கரைக்கு அருகே சொந்த வேலை காரணமாக சென்று கொண்டிருந்தோம் என்றும், அப்போது விழுப்புரம் தாலுக்கா காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் எங்கள் ஊரை சேர்ந்த வீரபத்திரன் என்பவர் சிவகங்கா என்பவரது வீட்டை முன்விரோதம் காரணமாக கொளுத்தி அழிம்பு செய்த வழக்கு சம்பந்தமாக கைது செய்துள்ளதாகவும், அவரை விசாரிக்க உள்ளதாகவும், அதில் எங்களை சாட்சியாக இருக்க கேட்டுக் கொண்டார் என்றும், நாங்கள் இருவரும் சம்மதம் தெரிவித்தோம் என்றும், ஆய்வாளர் அவர்கள் வீரபத்திரனை விசாரணை செய்து, அவர் கொடுத்துக் கொண்ட ஒப்புதல் வாக்குமூலத்தினை பதிவு செய்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், வல்லரசும், கையெழுத்து செய்தோம் என்றும், சொல்லிவிட்டு தற்போது எதிரியை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

இல்லை.